பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

……இப்பொழுது
இடங்கொடு,
இப்படி எல்லா
நீதியையும்
நிறைவேற்றுவது
நமக்கு
ஏற்றதாயிருக்கிறது
என்றார்…..


மத்தேயு 3:15

பிப்ரவரி மாத மலர்

இதழ் : 10
மலர் : 14





## சபை ஊழியரின் அன்பு மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மாதம் நம்மைக் கண்மனி போல பாதுகாத்து வழிநடத்தின தேவன், இந்த பிப்ரவரி மாதம் முழுவதும் அதிசயங்கள் அற்புதங்களோடுகூட நம் சபையை திருப்திபடுத்தி வழி நடத்துவார் என்பது நிச்சயம்.

இந்த மாதம் 14-ம் தேதி முதல் லெந்து நாட்கள் ஆரம்பமாகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய 30-வது வயது நிறைவடைந்தபோது உன்னதமான ஊழியத்தை ஆரம்பித்தார்.

முதலாவதாக யோவாஸ்நாகனிடம் வந்து யோர்தான் நதியில் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள வந்தபோது யோவான் அவருக்கு தடைசெய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா? என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக இப்போது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்போது அவருக்கு இடங்கொடுத்தான். (மத்-3:14,15)

இயேசு கடவுளாக இருந்தும் அவருக்கு வழியை ஏற்படுத்த வந்த யோவான்ஸ்நாகனிடமே ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள தன்னை தாழ்த்தினார். பிறருக்காக வாழ்வதற்கு ஒரு சாதரண மனிதனாக தன்னை அர்ப்பணித்தார். அப்படியென்றால் நாமும் கூட பிறருக்காக வாழ்வதற்காக இந்த லெந்து நாட்களிலே நம்மையும் அர்ப்பணிக்க வேண்டும் அல்லவா?

### 1. கொர்நேலியுவைப் போல.........

இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான்.அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தர்மங்களை செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். (அப்-10:1,2)

புறஜாதியானாகிய இந்த கொர்நேலியுயைத் தேட கர்த்தருடைய தூதன் வந்து அவனை நோக்கி உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது என்றுக் கூறினான். அதுமட்டுமல்ல அப்போதஸ்தலனாகிய பேதுருவை அனுப்பி அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்து பரிசுத்த ஆவியை பெறும்படி செய்து சபைக்குள் அவனை சேர்த்துக்கொண்டார். இதன் மூலம் புறஜாதிகளுக்கும் ஆண்டவர் இரட்சிப்பை அருளுவார் என்ற சத்தியத்தை உலகத்திற்கு கடவுள் வெளிப்படுத்தினார்.

பிரியமானவர்களே! மற்றவர்களுக்காக தானம் தருமங்கள் செய்த கொர்நேலியுவைப் போல நாமும் லெந்து நாட்களிலே மற்றவர்களுக்கு தானம் தருமங்களைச் செய்து ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்போம் அப்பொழுது ஆவிக்குரிய இஸ்ரவேலராக நம்மையும் கர்த்தர் மாற்றி வாக்குத் தத்தங்களை சுதந்தரித்துக்கொள்ள கிருபை செய்வார் என்பதிலே எள்ளளவும் சந்தேகமில்லை. அல்லேலூயா!

## 2. தபீத்தாளைப்போல.......

யோப்பா பட்டணத்தில் கிரேக்க பாஷையிலே தொற்காள் எனும் அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள் அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்து கொண்டு வந்தாள். அதனால் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்து குளிப்பாட்டி மேல் வீட்டில் கிடத்தி வைக்கப்பட்ட நிலைமையிலும் ஆண்டவர் பேதுருவை அனுப்பி அவள் உயிரடையும் படியாய் அற்புதம் செய்தார். இந்த மகா பெரிய அற்புதத்தின் மூலம் அவள் உயிரோடிருக்கும் பொழுது ஏழை விதவைகளுக்கு அளித்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் பெற்றுக்கொண்ட விதவைகளின் கண்ணீரை ஆண்டவர் துடைத்தார்.

ஆம் பிரியமாணவர்களே தபீத்தாளைப் போல நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்து ஏழை எளிய திக்கற்ற மக்களுக்கு வஸ்திரங்களைக் கொடுத்து அவர்களிடத்தில் அன்பு காண்பித்து இந்த லெந்து நாட்களிலே நற்கிரியைகளை நாமும் செய்கின்றபொழுது நம்முடைய நோய்களையும், துன்பங்களையும் கர்த்தர் நீக்கி மரணத்திலிருந்து நம்மை விடுவிப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அல்லேலூயா!

## 3.பவுல் அப்போஸ்தலனைப் போல.......

பவுல் அப்போதஸ்தலன் ஊழியம் செய்ய தேவ அழைப்பை பெற்றுக்கொண்டபொழுது தன்னுடைய முதல் இலட்சியமாக மற்றவர்களுக்காக வாழ வேண்டும் என்று தீர்மானித்தான். "பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு


பலவீனருக்கு பலவீனரைப் போலானானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாம் ஆனேன். சுவிசேஷத்தில் நான் உடன் பங்காளியாகும்படிக்கு அதன் நிமித்தமே இப்படி செய்கிறேன். (1–கொரி–9:22,23) எனக்கு லாபமாய் இருந்தவைகள் எவைகளோ, அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டம் என்று எண்ணினேன். (பிலி–4:7)

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் (பிலி–1:21) அவனவன் தனக்கானவைகளல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. (பிலி–2:4) என்பதையெல்லாம் தன்னுடைய நிருபங்களிலே வெளிப்படுத்தினார். தன் மரண பரியந்தம் இயேசுவைப் போல தம்மைத் தாமே தாழ்த்தினார். அதனால் புதிய ஏற்பாடு முழுவதும் அவருடைய 13 நிருபங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. இது எத்தனை பெரிய ஆசீர்வாதம் பாருங்கள்.

எனக்கு அன்பானவர்களே! நாமும் கூட இந்த லெந்து கால முழுவதும் நமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்வதற்கு நம்முடைய நேரம் தாலந்துகள் செல்வங்கள் வசதி வாய்ப்புகள் அறிவு உழைப்பு எல்லாவற்றையும் அர்ப்பணிப்போம். அதன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும். இயேசுவே நமக்கு முன்மாதிரி.

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி–2:6–8)

பிறருக்காக வாழ்வோம் தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம். கர்த்தர் தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடிருந்து அர்த்தமுள்ள லெந்து நாட்களை அனுசரிக்க கிருபை செய்வாராக!



# தேவ செய்தி

ஒரு விசுவாசியின் விலையேறப்பெற்ற சிறப்பு அம்சம் அவருக்குள் இருக்கிற விசுவாசம்தான் மகிமையின் நம்பிக்கையாக அவர் நமக்குள் வாசம் பண்ணுவது எத்தனை விலையேறப்பெற்றது. நமக்குள் இருக்கிற விசுவாசம் நமக்கு எப்படி பட்ட காரியங்களை செய்ய போகிறது என்பதை குறித்து சற்று தியானிக்கலாம்.

கர்த்தருடைய தேசமான இஸ்ரவேல் தேசம் மிகுந்த செழிப்போடிருந்த நாட்கள் அது. அதன் வளமைக்கும் ஆசீர்வாதத்திற்கும் அளவே இல்லை. அதன் இயற்கை வளத்திற்கும், செழிப்பிற்கும் காரணம் இஸ்ரவேல் தேசத்தில் இரவு முழுதும் பொழியும் மிகுதியான பனியாகும். இந்த பனியில் இருந்து தாவரங்கள் தங்களுக்கு தேவையான எல்லா நீர் சத்தையும் எடுத்து கொள்ளும்.

இஸ்ரவேலின் 70 சதவிகித வேளாண்மை இந்த பனியை நம்பி நடைபெறுகிறது, இஸ்ரவேலர்களை பொறுத்தமட்டில் மழை அவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான் ஏற்ற காலத்தில் பெய்யும் சிறிதளவு மழையே இஸ்ரவேலர்களுக்கு போதுமானதாயிருந்தது

இந்நாள் வரையிலும் விவசாயத்திற்கு முதல் தேவையாய் இருப்பது பனியே ஆகையால்தான் ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும் போது " தேவன் உனக்கு வானத்து பனியையும்,பூமியின் கொழுமையையும் கொடுத்து மிகுந்த தானியத்தையும் திராட்ச்சை ரசத்தையும் தந்தருள்வாராக (ஆதி 27:28) என்றார். மோசே கோத்திர பிதாக்களை ஆசீர்வதிக்கையில் " யோசேப்பை குறித்து கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கபடுவதாக இது வானத்தின் செல்வத்தினாலும் பனியினாலும். (உபா 33:14) என ஆசீர்வதித்தார். பின்னும் மோசே முழு இஸ்ரவேல் தேசத்தையும் ஆசிர்வதிக்கும் போது "இஸ்ரவேல் சுகமாய் தனித்து வாசம்பண்ணுவான்: யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சை ரசமுமுள்ள தேசத்திலே இருக்கும் அவருடைய வானமும் பனியை பெய்யும் (உபா 33:28) என ஆசீர்வதித்தார் இவ்வளவு ஏன்? கர்த்தர் ஓசியா மூலம் இவ்விதம் உறைத்திருக்கிறார் "நான் இஸ்ரவேலுக்கு பனியை போலிருப்பேன்"( ஓசியா 14:5)

இவ்விதம் கர்த்தரிடத்தில் இருந்து இறங்கி வரும் பனியும் மழையும் இஸ்ரவேலை செழிக்கபண்ணி கொண்டிருந்த இந்த நாட்களில் இஸ்ரவேலின் ஏழாவது ராஜாவாக ஆகாப் என்பவன் அறியணை ஏறினான். அவனுடைய மனைவியின பெயர் யேசபேல். இந்த யேசபேல் ஒரு புறஜாதி பெண். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை தெய்வமாக கொண்டவள் அல்ல இவள் பாகாலை தெய்வமாக வணங்கியவள்.

ஆகாபின் மனைவியாகிய யேசபேல் ஒரு காரியம் செய்தாள். தேசமே செழிக்கும் அளவிற்கு இஸ்ரவேலில் இவ்வளவு பனியும் மழையும் பெய்கிறதல்லவா? இதற்கு காரணம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அல்ல. பாகால் என்று சொல்லி தன் கணவனை அவள் நம்ப வைத்தாள். பாகால் என்பதற்கு " வானத்தின் அதிபதி என்பது அர்த்தமாகும். வானத்தின் அதிபதியாக பாகால் இருப்பதால்தான் இஸ்ரவேலில் இவ்வளவு பனியும் மழையும் பெய்கிறது. இஸ்ரவேலின் இந்த செழிப்பிற்கும். வளத்திற்கும் காரணம் வானத்தின் அதிபதியாகிய பாகல்தான் என்ற யேசபேலின் வார்த்தைகளை ஆகாப் அப்படியே நம்பினான். அதோடு நிற்காமல் இஸ்ரவேலின் தலைநகராகிய பாகாலுக்கு ஒரு கோயில்கட்டி பலி பீடத்தை எடுபித்து ஆசாரியர்களை நியமித்து சமாரியாவை பாகால் வானகத்தின் தலைநகராகமாக மாற்றிவிட்டான்.( I இராஜாக்கள் 16:30 32)

ஆகாப் இஸ்ரவேல் முழுவதையுமே வானத்தின் அதிபதி என்று சொல்லப்பட்ட பாகாலை தெய்வமாக வழிபடும்படி செய்தான் எகிப்த்திலிருந்து புறப்பட்ட நாள் முதல் அந்நாள் வரைக்கும் கர்த்தரே தெய்வம் என்று சொல்லி வந்த இஸ்ரவேலர்கள் இப்போது பாகாலே தெய்வம் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அதற்கு காரணம் பனியையும் மழையையும் பொழிய பண்ணுவது வானத்தின் அதிபதியாகிய பாகால் என்று அவர்களும் நம்ப ஆரம்பித்தார்கள்.

அப்படிபட்ட சூழ்நிலையில் இஸ்ரவேலில் குறிப்பிட்ட ஒரு மனிதன் இருந்தான். அவன் ஒரு திஸ்பியன் திஸ்பியன் என்பதற்கு " சிறையாளி" அல்லது " சிறைபட்டவன்" என்பது அர்த்தமாகும். சிறைபட்டவன் என்று சொன்னால் எதாவது யுத்தத்தின் முடிவில் சிறைபட்டு போனவன் அல்ல. கர்த்தராகிய இயேசு கிறஸ்து இந்த பூமியல் வாழ்ந்த போது ஒரு உவமையை சொன்னார். ஒரு ராஜாவினிடத்தில் ஒருவன் 10 ஆயிரம் தாலந்து கடன்பட்டிருந்தான். கடனை தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால் அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண் ஜாதி பிள்ளைகளையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று கடனை தீர்க்கும்படிக்கு கட்டளையிட்டான், அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து வணங்கி ஆண்டவனே என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்கு கொடுத்து தீர்க்கிறேன் என்றான். இந்த ஊழியக்ாரனுடைய ஆண்டவன் மனதிரங்கி அவனை விடுதலை பண்ணி கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படி இருக்க இந்த ஊழியக்காரன் புறப்பட்டு போகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிபணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைகாரன் ஒருவனை கண்டு அவனை பிடித்து தொண்டையை நெரித்து நீ பட்ட கடனை எனக்கு கொடுத்து தீர்க்க வேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும் எல்லாவற்றையும் உமக்கு கொடுத்து

தீர்க்கிறேன் என்று,வேண்டிக்கொண்டான், அவனோ சம்மதியாமல் போய் அவனை அவன் பட்ட கடனை கொடுத்து தீர்க்கும் அளவும் அவனை காவலில் போட்டுவித்தான். நடந்ததை அவன் உடன் வேலைகாரர் கண்டு மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள், அப்பொழுது அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து பொல்லாத ஊழியக்காரனே நீ என்னை வேண்டிக் கொண்டபடியினால் அந்த கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன் நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலைகாரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவன் பட்ட கடனை எல்லாம் தனக்கு கொடுத்து தீர்க்குமளவும் உபாதிக்கிறவரிடத்தில் அவனை ஒப்பு கொடுத்தான். அப்படி ஏதாவதொருவிதத்தில் கடன் பட்டு அந்த கடனை திரும்பி செலுத்த நிர்வாகம் இல்லாமல் தனக்குண்டான யாவற்றையும் விற்று தன் மனைவியை விற்று தன் பிள்ளைகளை விற்று பின் தன்னையே விற்றும் தன் கடனை அடைக்க முடியாமல் இறுதியில் கடன் கொடுத்தவனுக்கு அடிமையாகி சிறைபட்டு போறவன் அல்லவா? அவனுக்கு பெயர்தான் திஸ்பியன், அதாவது எல்லாவற்றையும் இழந்தவன். தன் நிலங்களை, தன் மனைவியை, பிள்ளைகளை, தனக்குள்ள எல்லாவற்றையும் இழந்தவன், தன் மீதே தனக்கு அதிகாரம் இல்லாதவன், பேச்சு வழக்கில் சொன்னால் திவாலானவன், அவனைதான் திஸ்பியன் என்று அழைப்பார்கள். எல்லாவற்றையும் இழந்த அப்படிபட்ட திஸ்பியன்தான் அவன்.

ஆம் வேதம் அவனை அப்படிதான் அறிமுகபடுத்துகிறது, பொதுவாக வேதம் ஒரு நபரை அறிமுகபடுத்தும்போது, அந்த நபருடைய கோத்திரம், தகப்பன் வீடு, குடும்ப பின்னனியோ,பொருளாதார பின்னனியோ அவனுக்கு கிடையாது. வேதம் அவனுக்கு கொடுத்த முதல் அடைமொழி அவன் ஒரு திஸ்பியன், எல்லாவற்றையும் இழுந்தவன், இனி இழப்பதற்கு அவனிடத்தில் ஒன்றும் இல்லை.

ஆனால் எல்லாவற்றையும் இழந்த அந்த திஸ்பியனுக்கு அவன் இழக்காத ஒன்று இருந்தது.அது அவன் கர்த்தர் மேல் வைத்திருந்த "விசுவாசம்" அதை அவன் இழக்கவேவில்லை அவனுடைய விசுவாசம் இதுதான் " பாகால் தெய்வமல்ல கர்த்தரே தெய்வம்"

எல்லாம் உள்ளவர்கள பாகாலே தெய்வம் என்று சொல்லி கொண்டிருந்த நாட்களில் எல்லவற்றையும் இழந்தவன் சொல்லுகிறான் கர்த்தரே தெய்வம், பாகாலே தெய்வம் என்று இஸ்ரவேல் தேசமே சொல்லி கொண்டிருந்த போது இஸ்ரவேலுக்குள் இருந்த திஸ்பியனுக்குள் ஒரு கடுமையான வைராக்கியம். பாகால் தெய்வமல்ல கர்த்தரே தெய்வம், ஆகையால்தான் அந்த திஸ்பியனுக்கு

எலியா என்று பேரிடப்பட்டிருந்தது. எலியா என்ற பெயருக்கு கர்த்தரே தெய்வம் என்று அர்த்தமாகும்.

வானத்தின் அதிபதி பாகால் என்று, பாகாலே தெய்வம் என்றும், இஸ்ரவேலர்கள் சொல்வதை எலியாவால் பொறுத்து கொள்ள முடியவில்லை வானத்தின் அதிபதி பாகால் அல்ல இஸ்ரவேலில் இவ்வளவு பனியும், மழையையும் கர்த்தர் பெய்ய பண்ணுகிறார். கர்த்தரரே தெய்வம் பாகால் தெய்வமல்ல என்று அவன் நிரூபித்து காட்ட அவன் விரும்பினான். கர்த்தரரே தெய்வம் என்று இஸ்ரவேலை சொல்ல வைப்பதுதான் எலியாவின் ஊழியம், தரிசனம், அழைப்பு எல்லாமே.

இந்த வைராக்கியத்தோடு தேவனுடைய சமூகத்துக்கு சென்ற எலியா. தேவனை நோக்கி கூப்பிட ஆரம்பித்தான். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே இஸ்ரவேலர்கள் உம்முடைய உடன்படிக்கையை மீறிவிட்டார்கள் அவர்கள் பாகாலை தெய்வமாக வணங்குகிறார்கள். இஸரவேலில் பனியும் மழையும் பொழிவதற்கு காரணம் வானத்தின் அதிபதியாகிய பாகால் என்று சொல்லுகிறார்கள். வானத்தின் அதிபதி பாகால் அல்ல சேனைகளின் கர்த்தராகிய நீரே சர்வத்திற்கும் அதிபதி கர்த்தராகிய நீரே தெய்வம் என்று நிரூபிக்க வேண்டும். வானத்திலிருந்து பனியும், மழையும் பெய்யாதபடிக்கு வானத்தின் பனியும் மழையும் அடைத்து போடும் என்று கருத்தாய் வேண்டிக் கொண்டான். கர்த்தர் வானத்தின் பனியையும் மழையையும் அடைத்து போட்டார்(யாக் 5:17)


வானத்தின் அதிபதி பாகால் அல்ல. கர்த்தர்தான் என்று நிரூபித்து காட்டுகிறேன்,என்கிற வைராக்கியதோடு எலியா நேராய் ஆகாபினிடத்திற்கு சென்றான். ஏன் வாக்கின்படியே இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்திருக்கும் என்ற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனை கொண்டு சொல்லுகிறேன் (1 இராஜாக்கள் 17:1)போய்விட்டான்

இதில் என்ன விஷேசம் என்றால் 5:17ல் சொல்லப்பட்டுள்ளது " எலியா என்பவன் நம்மைபோல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழைபெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்வதில்லை எலியா இஸ்ரவேல் தேசத்தின் மேல் மாத்தரம்தான் பனியும் மழையும் பெய்யாதபடிக்கு கர்த்தரை நோக்கி வேண்டிக் கொண்டார் ஆனால் கர்த்தரோ எலியாவாகிய நீ சொல்லும் வரைக்கும் இஸ்ரவேல் தேசத்தில் மாத்திரம் அல்ல முழு பூமியின் மேல் மழை பெய்யாது என்று சொல்லி " சமஸ்த்த பூமியின் மேலும் " பனியும் மழையும் பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்து போட்டார். சாரிபாத் விதவை இருந்த சீதோன் நாடு முதற் கொண்டு சகல

நாடுகளிலும் பஞ்சம் உண்டாயிற்று. ஆகாப் எல்லா தேசங்களுக்கும் ஆள் அனுப்பி "எலியா என்பவன்தான் உங்கள் தேசத்தில் பனியும் மழையும் பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்தவன், அவன் உங்கள் நாட்டில இருக்கிறானா? என்று கேட்டு அவன் இல்லை என்பதை உறுதி செய்ய அவர்களிடம் சத்தியம் வாங்கி கொண்டான் (1 இராஜாக்கள் 18:10)

கொஞ்சம் நிதானித்து பாருங்களேன் இந்த எலியாவுக்கு எந்த குடும்ப பின்னனியும் கிடையாது. தன் சொத்துக்களை பராமரிக்கும் திறமை இல்லாதவன் தன் குடும்பத்தை நிர்வகிக்க திராணி இல்லாதவன் ஒரு அடிமை எல்லவற்றையும் இழந்தவன். ஒரு திஸ்பியன் இழப்பதற்கு அவனிடத்தில் ஒன்றும் இல்லை கர்த்தர் மேல் வைத்திருந்த விசுவாசம் அந்த விசுவாசம் அவனை உன்னதங்களுக்கு கொண்டு போனது அந்த விசுவாசம் தன் மீதே தனக்கு அதிகாரம் இல்லாத அவனுக்கு சமஸ்த பூமியின் மேலும் அதிகாரத்தை கொடுத்தது எந்த ஜனத்தின் மத்தியில் அவமானப்பட்டானோ அந்த ஜனத்தின் வாழ்வாதாரம் முழுவதும் எலியாவின கையில் கொடுக்கபட்டது எலியா சொல்லாமல் மழையுமில்லை,விளைச்சலுமில்லை, எலியாவுக்குள்ளிருந்த விசுவாசம் சமஸ்த பூமியும் அவனை திரும்பி பார்க்க செய்தது.

அருமையான தேவ ஜனமே!. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.. உங்கள் பிதாக்கள் வழிபட்டு வந்த விக்கிரக வழிபாட்டைவிட்டு திரும்பி உங்களுக்கு உதவி செய்ய இந்த பூமியின் யாரும் இல்லாதிருந்தும், எந்த விதமான குடும்ப பின்னனியோ, பொருளாதார பின்னனியோ இல்லாதிருந்தும் பல பாடுகளில் மத்தியிலும். உபத்திரவங்கள் மத்தியலும் கர்த்தரை விடாமல் பற்றி கொண்டிருக்கிறார்கள் அல்லவா. உங்கள் விசுவாசம் பெரிது பல இழப்புகளை நீங்கள் கடந்து வந்தாலும் விசுவாசத்தை இழந்து போகாமல் காத்து கொண்டீர்களே கர்த்தராகிய இயேசுவே தெய்வம் என்கிற இந்த விசுவாசம் உங்களை உன்னதங்களுக்கு கொண்டு போகப்போகிறது. சமஸ்த பூமியும் உங்களை திரும்பி பார்க்க போகிறது உங்களுக்குள் இருக்கிற அந்த மகிமையின் நம்பிக்கையை சாதாரணமாக எண்ண வேண்டாம். எந்த இடத்தில் அவமானப்பட்டு நின்றீகளோ அதே இடத்தில் கர்த்தர் உங்கள் தலையை உயர்த்த போகிறார் ஆயத்தமாயிருங்கள் அந்த விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.



"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்



செல்வி. ஜியோஃபி ஷம்மா ஏசுரெத்தினம்
செல்வி. பெனிடா ரையாசிங் டேவிட்பாஸ்கர்
செல்வி. ஷாரோன் கிரேஸ் எபிநேசர்
செல்வி. கிறிஸ்து ராணி ஆசீர்வாதம்
செல்வி. ஹெப்சிபா பியூலா தாமஸ்

செல்வன். ஜாண் அற்புதராஜ்
செல்வன். பிரவீன் ஐசக்துரை
செல்வன். அருண்பிரகாஷ் அல்போன்ஸ்

சகோதரி. ராணி ராமமூர்த்தி
சகோதரி. நீலாவதி ஆசீர்வாதம்
சகோதரி. மெர்லின் ஜோன்ஸ்
சகோதரி. ஜாய் ஷெகினா ஜாண்போஸ்கோ
சகோதரி. பிரிஸ்சில்லா ஆமோஸ்

சகோ. இம்மானுவேல் ஸ்டீபன்
சகோ. ஜெயசேகர்
சகோ. ஜாண்சன்
சகோ. வேலு ராமர்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. நவீன் ஜீவ காருண்யன்
திருமதி & திரு. ஆஸ்டின் முத்தையா
திருமதி & திரு. ஸ்ரீதர்
திருமதி & திரு. அந்தோனி சாமி
திருமதி & திரு. ராஜவேல்



# 2018 பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/02/2018 | சகோ. சுகுமார் | சகோ. தாமஸ் |
| 11/02/2018 | சகோ. ஐசக் துரை | சகோ. ஜெகநாதன் |
| 18/02/2018 | சகோ. பால் பாண்டியன் | சகோ. அசோக்குமார் |
| 25/02/2018 | பாஸ்டர் . ஆர்தர் செல்லாராஜா | |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/02/2018 | சகோ. நாராயண வடிவு | |
| 09/02/2018 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ.ஆசீர்வாதம் |
| 16/02/2018 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/02/2018 | பாஸ்டர். ஆர்தர் செல்லாராஜா | |

**08/02 /2018** அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )–
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

**14/02/2018** சாம்பல் புதன் ஆராதனை (இடம் ஜெபவீடு, பாஹீல் )
நேரம் ( மாலை 6:30 முதல் 8:00 வரை)

மாதாந்திர சகோதரிகள் ஐக்கிய கூடுகை
(நாள், இடம், நேரம், மற்றும் வேத வினா பகுதி பின்னர் அறிவிக்கபடும்)

**23/02/2018** அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி பின்னர் அறிவிக்கபடும்)

**25/02/2018** ஞாயிற்று கிழமை உபவாச மற்றும் சாட்சி ஆராதனை
(இடம் ஜெபவீடு, பாஹீல் )
நேரம் ( காலை 9:00 முதல் 12:30 வரை)
சிறப்பு செய்தி : பாஸ்டர். **ஆர்தர் செல்லாராஜா**

## 2018 பிப்ரவரி மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. எந்த மிருகங்களின் மாமிசத்தை புசிக்கவும், உடல்களை தொடவும் கூடாது?
2. பறக்கிறவைகளில் அருவருப்பாய் இருக்கிறவை எவை?
3. பிறந்த ஆண் பிள்ளையை எட்டாம் நாளில் என்ன பண்ணப்படவேண்டும்?
4. சரீரம் முழுவதும் குஷ்டமுள்ளவனில் எது காணப்பட்டால் அவன் தீட்டுள்ளவன்?
5. சரீரத்தில் எவைகள் இருந்தால் அது வெள்ளை தேமல்?
6. சுத்திகரிக்கபட வேண்டிய குஷ்டரோகி எவைகளை கொண்டு வர வேண்டும்?
7. எட்டாம் நாளில் சுத்திகரிக்கபடுகிறவன் எவைகளை கொண்டுவரவேண்டும்?
8. தன் கையில் மீதியான எண்ணையில் கொஞ்சம் சாரியன் எங்கே பூச வேண்டும்?
9. எவைகளுக்ககாக வெள்ளாட்டுகடாக்ககளை குறித்து சீட்டு போட வேண்டும்?
10. அக்கிரமங்களை சுமந்த வெள்ளாட்டு கடா எங்கே போகும்?
11. வருஷத்தில் ஒரு தரம் எவர்களுக்காக பாவ நிவர்த்தி செய்யப்பட வேண்டும்?
12. மாமிசரீத்தக்கு உயிராக இருப்பது எது?
13. எவைகளை கைகொண்டு அவைகளின்படி செய்கிறவன் அவைகளால் பிழைப்பான்?
14. எவைகளை நாடக்கூடாது?
15. ------ கேளாமல் இருக்க வேண்டும் ------- பாராமல் இருக்க வேண்டும்?

விடைகளை வருகின்ற 20-02-2018 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் அனுப்பலாம் # 66015503) விடைகளை வேதாகமத்தில் லேவியாராமத்தில் 11,12,13,14,16,17,18,19 பதிலைத் தேடுங்கள் .

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

**-தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -**

மத்தேயு 7:7

## 2018 ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில்

1. பழுதற்ற ஒரு இளங்காளையை ( லேவி 4:3)
2. தகன பலி பீடத்தின் அடியில் ( லேவி 4:7)
3. வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு இளங்கடா ( லேவி 4:23)
4. தான் செய்தது பாவம் என்று ( லேவி 5:5)
5. குற்றமுள்ளவனாய் ( லேவி 5:17)
6. சர்வாங்க தகனபலி ( லேவி 6:9)
7. கர்த்தருக்கு சுகந்த வாசனையாக ( லேவி 6:21)
8. பலியை செலுத்தின ஆசாரியன் ( லேவி 7:8)
9. ஸ்தோத்தரத்திற்காக படைக்கும் பலிகள் ( லேவி 7:14)
10. பாகையை தரித்து அதின் மேல் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டம் ( லேவி 8:9)
11. பிராயசித்தம் ( லேவி 8:15)
12. பழுதற்ற ஒரு ஆட்டுக்கடா ( லேவி 9:2)
13. ஜனங்களை ஆசீர்வதித்தார்கள் ( லேவி 9:23)
14. பரிசுத்தம் ( லேவி 10:3)
15. தகனபலியில் மீதான போஜனபலி ( லேவி 10:13)

## 2018 ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்

Sis. அ.ஜோன் அசோக்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. டேவிட் பாஸ்கான்

**என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் (எரேமியா 31:14)**

அடைமானம் வைத்தோம், யூதர்கள் தங்கள் பஞ்சத்தில் தங்கள் குடும்பத்தை காப்பாற்ற நிலங்களையும் தங்கள் திராட்ச்சை தோட்டங்களையும், வீடுகளையும் அடைமானமாக வைத்த தானியம் வாங்கியிருந்தார்கள் (5:3) இது இவர்கள் இரண்டாவது கூக்குரல்.

வீடுகள் அடைமானம் என்றால் இனி வாடகை வீட்டில்தான் குடியிருக்க வேண்டும். நிலங்கள் அடைமானம் என்றால் கோதுமையின் வருமானம் இல்லை. திராட்ச்சை தோட்டங்கள் அடைமானம் என்றால் செழிப்பும் மகிழ்சியும் இல்லை. இவ்விதமாய் யூதர்கள் கூக்குரல் எழும்பிற்று.

தீர்வை செலுத்த முடியவில்லை: யூதர்களின் பணகஷ்டம் இன்னும் அதிகரித்து ராஜாவுக்கு தீர்வை செலுத்த தங்கள் நிலங்கள் மேலும் சிலர் கடன் வாங்கி இருந்தார்கள் (5:4) ராயனுக்குரியதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்த வேண்டும் என்பது ஆண்டவரின் கட்டளை. அதை கட்ட யூதர்களால் செலுத்த முடியாமல் கடன்பட்டிருந்தார்கள்.

**அடிமையானோம்:** யூதர்கள் நான்காவது முறையீடு என்னவென்றால் கடன் வாங்கிய நாங்கள் கடன் கொடுத்தவர்களுக்கு அடிமைபட்டு போனோம். கடன் வாங்கியவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை என்ற (நீதி 22:7) வசனத்தின்படியே அவர்கள் அடிமைபட்டு போனார்கள்

எங்கள் உடலும் எங்கள் சகோதரன் உடலும் சரி. எங்கள் பிள்ளைகள் அவர்கள் பிள்ளைகளும் சரி, ஆனாலும் இதோ எங்கள் குமாரரையும் எங்கள் குமாரத்திகளையும் அடிமைதனத்திற்கு உட்படுத்த வேண்டியதாயிற்று . அப்படியே எங்கள் குமாரத்திகள் சிலர் அடிமைபட்டு கிடந்தார்கள். அவர்களை மீட்க எங்களுக்கு நிர்வாகமில்லை. எங்கள் நிலங்களும் எங்கள திராட்ச்சை தோட்டங்களும், வேறே மனிதர் கைவசமாயிற்று என்றார்கள் (நெகே 5:5)

இந்த நான்கு கூக்குரல் தேவ ஜனங்கள் மத்தியில் எழும்பிற்று. அவைகளை களைந்து அவர்களுக்கு நிவாரணமளிக்க நெகேமியா முயற்சி எடுத்தார். தேவனுடைய சபையானது ஜனங்களுக்கு ஆவிக்குரிய பிரகாரம் இரட்சிப்பு, அபிஷேகம். பரிசுத்த ஜீவியமடைவதற்கு உதவியாயிருப்பது போலவே பூமிக்குரிய பிரகாரம் அவர்களின் பிரச்சனைகளுக்கு பரிகாரம் செய்ய முயற்ச்சிக்க வேண்டும், அப்போதுதான் இரட்சிக்கப்படும் ஆத்துமாக்கள் முழுமையான சந்தோஷத்துடன்கர்த்தரை ஆராதிக்க முடியும்.

நெகேமியா தன் ஜனத்திற்கு நிவாரணம் தேட சபையை கூட்டினார். அப்பொழுது அவர்கள் ஒரு பெரிய சபையாய் கூடினார்கள் (5:7) அங்கு நெகேமியா எடுத்து கொண்ட நிவாரண முயற்சிகள் தியானிப்போம்.

1. மன்னிப்போமாக: யூதர்கள் கடன் பட்டதும். அடிமைபட்டதும் அந்நியர்களிடத்திலல்ல. தங்கள் உடன் சகோதரர்களாகிய மற்ற யூதர்களிடத்தில்தான் அடிமைபட்டிருந்தார்கள். கடன் கொடுத்தவர்கள் யூதர்களில்

உள்ள பிரபுக்களும், அதிகாரிகளும்தான். (5:7) அதாவது வசதியும் பெலமுள்ளவர்களும் ஏழைகளான யூதர்களும் கடன் கொடுத்திருந்தார்கள். நெகேமியா அவர்களுக்கு சொன்ன ஆலோசனை என்ன வென்றால் நீங்கள் கொடுத்த கடனை மன்னித்து விடுங்கள் என்றார்.

நானும் என் சகோதரரும் என் வேலைகாரரும் இவ்விதமாகவே அவர்களுக்கும் பணமும் தானியமும் கடன் கொடுத்திருக்கிறோம். இந்த வட்டியை விட்டுவிடுவோமாக (5:10)என்று நெகேமியா கூறினார். அதை அந்த பிரபுக்கள் கேட்டு அந்த கடனையும் மன்னித்தார்கள் வட்டியையும் வேண்டாம் என்று விட்டு விட்டார்கள். தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் காண்பிக்க வேண்டிய ஒரு நற்பண்பை இங்கு காண்கிறோம்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத் 6:12) என்று கடன்பட்டவர்களை மன்னிக்க வேண்டும் நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டினால் நமக்கும் இரக்கம் கிடைக்கும். சிறைபட்ட மற்றவர்களை விடுதலை செய்தால் நாமும் நமது சிறையிருப்பில் இருந்து விடுவிக்கப்படுவோம்.

2. திரும்ப கொடுப்போமாக பிரபுக்களும் அதிகாரிகளும் ஏழைகளான யூதர்களுக்கு கொடுத்த கடன் பணத்திற்காக வட்டியை வாங்கி வந்தார்கள். இப்போத நெகேமியாவின் ஆலோசனைபடி அந்த வட்டியை விட்டு விடவும் திரும்பி கொடுக்கவும் தீர்மானிக்கபட்டது. அதற்கு இந்த பிரபுக்கள் இசைந்து வந்தார்கள்.

நீங்கள் இன்றைக்கு வாங்குகிற நூற்றுக்கென்று விதமாக அவர்களிடத்தில் தண்டி வருகிற வட்டியையும் அவர்களுக்கு திரும்ப கொடுத்துவிடுங்கள் என்றார்.

தேவனுடைய பிள்ளைகள் பூரண இரட்சிப்புக்கு ஆரம்பத்திலேயே ஒப்பு கொடுக்கிறவர்கள் சரியான விதத்தில் ஒப்புரவாக வேண்டும் இந்த ஒப்புரவாகுதலுக்கு இடங்கொடுக்க அதிக கிரயம் செலுத்த வேண்டும்

சகேயு இரட்சிக்கபட்ட போது நடந்தது என்ன? இயேசுவை தன் வீட்டில் முதலாவது ஏற்று கொண்டார். உடனே தன் கடந்த கால பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டார். அதை தொடர்ந்து அநியாயமாய் வாங்கினதை நாலத்தனையாய் திரும்பச் செலுத்துகிறேன் (லூக் 19:8) என்று கூறினார். அதற்கு பின்புதான் “இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது.” என்று இயேசு சொன்னார்”(லூக் 19:9)

எனவே அநியாயமாய் வாங்கினவைகள் திரும்ப கொடுக்கபட வேண்டும். வட்டி வாங்காதே என்பது நம் ஆண்டவரின் முக்கிய கட்டளை (யாத் 22:25) எனவே வேத வசனத்தின்படி நெகேமியா ஆலோசனை கூறிய பொழுது அந்த பிரபுக்கள் கீழ்படிந்தார்கள். வட்டி வாங்கியதை நிறுத்தியது மட்டுமல்ல: இதுவரை வாங்கியிருந்த வட்டியையும் திரும்பி கொடுத்தார்கள்.ஆஹா இதுவல்லவா சரியான இரட்சிப்பு!

இன்று நம் சபைகளில் வேத வசனத்தினபடி உபதேசம் கொடுக்கும் போது கீழ்படிந்து ஏற்று கொள்பவர்கள் எத்தனை பேர்? கர்த்தர் என்னோடு இப்படி பேசுகிறார் என்ற வேத வசனத்தின் ஆரோக்கியமான உபதேசத்தை ஏற்று கொள்ளாமல் எதிர்த்து பேசுகிற முரட்டாட்டம் செய்கிறவர்கள் அல்லவா நம்மிடத்தில் ஏராளம் பேர் எழும்பியுள்ளனர். எனவே ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய முடியவில்லை. கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியுள்ள பூரண புருஷராகவோ அல்லது பரிசுத்தவான்கள் சீர்பொருந்தவோ ஒப்பு கொடுப்பதில்லை. இன்று திரும்ப கொடுங்கள் என்ற ஒப்புரவாகுதலின் உபதேசத்தை கை கொள்ள எழும்புவோமாக!

நெகேமியா உபசேதத்தை கேட்ட ஜனங்கள் சொன்ன பதில் என்ன? அதற்கு சபையோர் எல்லோரும் ஆமென் என்று சொல்லி கர்த்தரை துதித்தார்கள் பின்பு ஜனங்கள் இந்த வார்த்தையினபடியே செய்தார்கள் (5:13)

**1.தியாகம் செய்வோமாக**

நெகேமியா எருலேமின் மேல் பனிரென்டு வருஷம் அதிபதியாய் செயல்பட்டார் அந்த நாட்களில் (5:14) மற்ற அதிபதிகளில் வாங்குகிறபடியை நெகேமியா வாங்கவில்லை

எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்கு பாரமாயிருந்து அவர்கள் கையில் அப்பமும், திராட்சைரசமும், வாங்கிதுமல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கி வந்தார்கள். அவர்கள் வேலைகாரர்கள் முதல் ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தினார்கள். நானோ தேவனுக்கு பயந்ததினால் இப்படி செய்யவில்லை(5:15) என்றார்

எல்லோரும் வாங்குகிற படியையும் சலுகைகளையும் நெகேமியா வாங்கவில்லை. இது நெகேமியாவின் தியாகத்தை குறிக்கிறது. ஒரு நல்ல தலைவன் நற்பண்பை இங்கு காண்கிறோம். சபை தலைவர்கள் நெகேமியாவை போல தியாகிகளாய் இருக்க வேண்டும். மற்ற தலைவர்கள் செயல்படுவதைபோல் நெகேமியா செயல்படவில்லை. எருசலேமின் அலங்கத்தை கட்டுவது ஒரு சிறப்பான ஊழியம் அந்த சிறப்பான ஊழியத்தை செய்யும் தலைவன் தியாகியாய் இருக்கவேண்டும் நாம் இதில் நல்ல முன் மாதிரியை நெகேமியாவினிடத்தில் காண்கிறோம். தேவ ஊழியத்தின் தலைவர்கள் தியாகியாய் இருப்பது அவசியம். நமக்கு தேவன் தரும் பணம், பொருள், சிலாக்கியங்களை நமக்கென்று வைத்து கொள்ளாமல் அவைகளை தேவ ஜனங்களுக்கு பயன்படுத்துவது நல்ல செயல் அது தியாகமான செயலுமாகும்.

( இன்னும் தொடரும்)

சபையின் செயற்குழு சார்பாக
இனிய பிறந்த நாள் மற்றும்
திருமண நாள் வாழ்த்துக்கள்

# பில்லி சண்டே

**புகழ் அனைத்தும் இயேசுவுக்கே!**

**பேஸ்பால் என்பது ஒருவகை விளையாட்டு. இது இங்கிலாந்தின் தேசிய விளையாட்டு ஆகும் கிரிக்கெட் எவ்வளவு பிரபலமடைந்துள்ளதோ, அதுபோலவே பேஸ்பால் விளையாட்டும் பிரபலமானது.**

**பில்லி சண்டே ஒரு விளையாட்டுப் பிரியர். 1800–ம் ஆண்டுகளுக்கு பிறகு பேஸ்பால் விளையாட்டு பிரபலமடைந்த போதிலும் திறமைமிக்க முன்னணி வீரராக விளங்கினார் பில்லி. இவர் புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது.**

**ஒரு நாள் தற்செயலாக ஒரு சுவிசேஷக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார் பில்லி. சுவிசேஷகர் கர்ணல் கிளார்க் என்பவர்ஆவியின் அபிஷேகத்துடன் இறைசெய்தியைப் பகர்ந்துகொண்டார். பில்லியின் உள்ளத்தில் ஆண்டவர் கிரியை செய்ய ஆரம்பித்தார். அன்றே தன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தார். பில்லியின் வாழ்வு மாற்றம் பெற்றது.**

**அறிவர் சாப்மென் என்பவருடன் ஊழியத்தில் இணைந்தார். சொற்ப வருமானம் மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது. அன்றாடம் திண்டாட வேண்டிய அவல நிலை. அச்சமயம் பேஸ்பால் கிளப்புகள் பல அவரை அழைத்தன. அதிக சம்பளம் தருவதாக ஆசை வார்த்தை கூறினர். பில்லியோ ஊழியத்த்தில் முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை.**

**பில்லியின் உத்தமகுணத்தை ஆண்டவர் அங்கீகரித்து அவரைப் பயன்படுத்த ஆரம்பித்தார். விரைவிலேயே அமெரிக்க தேசத்தின் பிரபலமான ஒரு பிரசங்கியாராக மாறினார். இவரின் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் பல பாகங்களிலிருந்தும் திரண்டு வந்தனர்.**

**நாட்களில் அமெரிக்காவில் மதுக்கடைகள் எங்கு பார்த்தாலும் நிரம்பியிருந்தன. குடிவெறியினால் பல குடும்பங்கள் சீரழிந்தன. இந்நிலையை மிகுந்த வன்மையாகக் கண்டித்தார் பில்லி. இதனால் மதுபான தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு மக்கள் புது வாழ்வு வாழத்தொடங்கினர். ஆசாரிப்புக்கூடாரம் என்ற பெயரில் பல திருச்சபைகளை கட்டிய பில்லி, மக்களின் ஆத்மீக வாழ்வை வளப்படுத்தினார் என்றால் மிகையாகாது.**

**அன்பரே! உங்கள் புகழ் அனைத்தையும் இயேசுவின் பணிக்கு செலவிட முடியுமா?**

**உன் பிள்ளைகள்
தங்கள் தேசத்துக்குத்
திரும்பிவருவார்கள் என்று
கர்த்தர் சொல்லுகிறார்**



# அன்பு

கர்த்தர் நம் மேல் அன்பாகவே இருக்கிறார் அன்பின் குணாதிசயம் தன்மை எல்லாவற்றையும் நாம் பார்க்க போகிறோம் . Iயோவான் 4:7-8 என்ற வசனத்தின்படி ஆண்டவர் மனதுருக்கமுள்ள தேவன் இரக்கத்தின் அதிபதி நன்மை செய்கிற தேவன் நம் மீது அன்பாகவே இருக்கிறார். Iயோவான் 4:10 எத்தகையது என்று பார்ப்போம் . நமக்காக தம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக அனுபவிக்க கொடுத்தார்.

நம்முடைய பாவங்கள் சிவப்பென்றிருந்தாலும் பஞ்சைப் போல வெண்மையாக்குகிற தேவன் தம்முடைய பரிசுத்த இரத்தத்தை சிலுவையில் சிந்தி நமக்காக மரித்தார்.

இப்பொழுது அன்பின் தன்மை என்னவென்று சற்றே சிந்திப்போம் I கொரி I8:I3 என்ற வசனத்தின்படி விசுவாசம் நம்பிக்கையை விட அன்பே பெரிது எனப்பார்க்கிறோம். அன்பின் சில குணாதிசயங்களைப் கவனிப்போம் I கொரி I3:4-7 வசனங்களில் அன்பு நீடிய சாந்தமும்,தயவும் உள்ளது அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும், தாங்கும், விசுவாசிக்கும், நம்பும், சகிக்கும், என்று பார்க்கிறோம். எல்லா நல்லவிதமாக முடியும் என்ற நம்பிக்கையோடு விசுவாசத்தோடு சூழ்நிலையை அனுசரித்து அன்போடு பொறுமையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

Iயோவான் 4:I6-20ல் அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனில் அன்பு கூறுகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன் உனக்கு வசதி இருக்கும் போது உன்னிலும் கஷ்டப்படுகிற சகோதரரோடு உபகாரம் உதவி செய்ய வேண்டும்.

நாமும் எல்லாரிடமும் சகோதர அன்பபோடு பழகி தேவையுள்ளோருக்கு முடிந்த அளவு உதவ வேண்டும் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் அதை நாம் கை கொள்ளும் போது கர்த்தர் நம்மீது அன்பும் நாம் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம் . ஏழை எளியவர்களிடத்திலும் நம்மிலும் தாழ்ந்தவர்களிடத்திலும் தேவனுடைய பிள்ளைகளிடத்திலும் அன்பு கூற வேண்டும் நமக்கு கொடுத்திருக்கும் பிரதான கட்டளை உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே நல்ல சமாரியன் உவமை அதற்காகவே கூறப்பட்டுள்ளது.

ஆண்டவர் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு புலம்பும் போது கிருபையோடு தம்முடைய இராஜ்ஜியத்தில் கூட்டி சேர்கிறார். அதற்காகவே ஆண்டவருடைய வலது பாரிசத்தில் அமர்ந்து நமக்காக பரிந்து பேசுகிற தேவனாய் இருக்கிறார். கெட்ட குமாரன் உவமை அதற்கு கூறப்பட்டுள்ளது. அதன்படி ஆண்டவர் நம்முடைய தப்பிதங்களை ஏற்றுக் கொண்டு அன்போடு சேர்த்துக் கொள்கிறார். ஆண்டவருடைய வருகை சமீபத்தில் இருக்கிறது. நியாய தீர்ப்பின் நாளில் இருக்கிறோம்.

அன்பாக இயேசு சொன்னது என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உள்ளது. ஒரு ஸ்தலத்தை நான் போய் ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்தில் உங்களை சேர்த்துக் கொள்வேன். என்றார், எவ்வளவு பெரிய அன்பு, ஆகவே நாம் அவருடைய வசனங்களை வாசிப்பது மட்டுமல்லாமல் அவருடைய கட்டளையின்படி நடப்போமாக. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அன்பாவே இருக்கிறார்.

.ஆமென்.

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு




















## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்
66021072

செயலாளர் – சகோ. ஜெகநாதன்
23917287 - 66889535

பொருளாளர்– சகோ. எபநேசர்
23922058 - 66857827

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . தயா இயேசுரெத்தினம்
23924262 - 94974732

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. ஆரோக்கியராஜ்
66159784

Church Website Address - ahmaditamilcongregation.org
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address
Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only